இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 325 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 21 – வெள்ளிக்கிழமை 05 ஜுலை 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 325 : Thiruvalluvar Year - 2055 - Aani 21 - Friday 05 July 2024 - Dak 12 Pages ₹ 5.00

### ‘முதல்வரின் முகவரி’ துறையில் – ‘நீங்கள் நலமா?’ திட்டத்தில் பயன்பெறும்

# பயனாளிகளிடம் உரையாடிய முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## திட்டச் செயல்பாடுகள் பற்றி கருத்துகளைக் கேட்டறிந்தார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.7.2024) தலைமைச் செயலகத்திலிருந்து, அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளைத் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்த கருத்துக்களைக் கேட்டறியும் முதல்வரின் முகவரி துறையின் “நீங்கள் நலமா” என்ற திட்டத்தில் பயனாளிகளை நேரடியாக வீடியோ கால் வாயிலாக தொடர்பு கொண்டு அவர்களின் கருத்துகள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த பின்னூட்டங்களைக் கேட்டறிந்தார். இந்த நிகழ்வின்போது, முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், முதல்வரின் முகவரித்துறை சிறப்பு அலுவலர் த.மோகன் ஆகியோர் உடனிருந்தனர்.

சென்னை, ஜுலை 5-

**தமிழக அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளை வீடியோ கால் வாயிலாக தொடர்பு கொண்டு அரசு நலத்திட்டங்கள் குறித்து பயனாளிகளின் கருத்துக்கள் மற்றும் அரசு நலத் திட்டங்கள் குறித்த பின்னோட்டங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார்.**

தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் நலமாக இருக்க வேண்டும் என்பது தான் ‘நீங்கள் நலமா’ திட்டத்தின் முதன்மையான நோக்கம். இந்த திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் பயன்பெற்ற பயனாளிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்பு கொண்டு அரசின் நலத்திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார்.

சென்னை தலைமைச்செயலகத்தில் இருந்தவாறு வீடியோ கால் மூலம் நீங்கள் நலமா திட்டத்தில் பயன் பெற்ற பயனாளிகளிடம் நேரடியாக வீடியோ கால் மூலம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாடினார். பயனாளிகளின் கருத்துக்கள் மற்றும் அரசு நலத்திட்டங்கள் குறித்த பின்னோட்டங்களையும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கேட்டு அறிந்தார்.

இந்த கூட்டத்தில் முதன்மை தலைமைச் செயலாளர் முருகானந்தம், முதல்வரின் முகவரி துறை சிறப்பு அலுவலர் மோகன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

தமிழகத்தில் மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண், முதல்வரின் காலை உணவு, கலைஞர் மகளிர் உரிமை, இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம், ஒலிம்பிக் தேடல், நான் முதல்வன், உங்கள் தொகுதியில் முதல்வர், முதல்வரின் முகவரி, கள ஆய்வில் முதல்வர் என திட்டங்கள் அனைத்தும் கோடிக்கணக்கான மக்களை மகிழ்வித்து வருகின்றன.

இவை ஒவ்வொரு குடும்பத்தையும், தனிமனிதரையும் மேம்படுத்தும் திட்டங்கள் ஆகும். கலைஞர் மகளிர் உரிமை திட்டம் மூலம் 1.15 கோடி பெண்கள் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமை தொகை பெறுகின்றனர். விடியல் பயண திட்டத்தில் 445 கோடி முறை பயணித்து பெண்கள் மாதம் 888 ரூபாய் வரை சேமிக்கின்றனர்.

‘மக்களை தேடி மருத்துவம் திட்டத்தில் ஒரு கோடி பேரும், காலை உணவு திட்டத்தில் 16 லட்சம் மாணவர்களும், புதுமைப்பெண் திட்டத்தில் 4.81 லட்சம் மாணவிகள் மாதம் ஆயிரம் ரூபாய் பெற்றும் பயனடைகின்றனர்.

நான் முதல்வன் திட்டத்தில் 28 லட்சம் இளைஞர்கள், இல்லம் தேடி கல்வியில் 24 லட்சத்து 86 ஆயிரம் பள்ளி குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். புதிய குடிநீர் இணைப்பை 62 லட்சத்து 40 ஆயிரம் பேர், புதிய இலவச மின் இணைப்பை 2 லட்சம் பேர், உயர்த்தப்பட்ட ஓய்வூதியத்தை 30 லட்சம் முதியோர், 5 லட்சம் மாற்றுத் திறனாளிகள் பெறுகின்றனர். நம்மை காக்கும் 48’ திட்டத்தில் 2 லட்சம் உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. முதல்வரின் முகவரி திட்டத்தில் 19 லட்சத்து 69 ஆயிரம் பேருக்கு பயனளிக்கும் மனுக்களுக்கும், மக்களுடன் முதல்வர் திட்டம் மூலம் 3.40 லட்சம் மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளன.

## மக்கள் பயன்பெற நிறைவேற்றப்படும் திட்டங்கள்!

### பீகாரில் உள்ள பாலங்களின் உறுதித் தன்மையை ஆராய

## உயர்மட்டக் குழு அமைக்க அரசுக்கு உத்தரவிடுக! உச்சநீதிமன்றத்தில் மனு!

பாட்னா, ஜுலை 5–

பீகாரில் உள்ள அனைத்து பாலங்களையும் ஆய்வு செய்ய உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பீகார் தொடர் பால விபத்துகள் அரங்கேறும் மாநிலமாக மாறி வருகிறது. கடந்த மார்ச் மாதம் சுபால் மாவட்டம் மரிச்சா பகுதி அருகே கோசி ஆற்றின் மீது 10.2 கிலோ மீட்டர் தூரத்துக்கு ரூ.984 கோடி செலவில் கட்டப்பட்டு வந்த பாலம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானது.

ஜுன் 27ம் தேதி கிஷன்கஞ்ச் மாவட்டத்தில் ஒரு பாலமும், 29ம் தேதி மதுபானி மாவட்டம் மாதேபூர் பகுதியில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வந்த 75 மீட்டர் நீள பாலமும், கடைசியாக கடந்த 30ம் தேதி பதாரியா பஞ்சாயத்தின் கோஷி டாங்கி கிராமத்தில் தாக்கூர்கஞ்ச் பகுதியில் பாலம் இடிந்து விழுந்தது. இதனிடையே சிவான் மாவட்டம் தியோரியா தொகுதியில் பல கிராமங்களை இணைக்கும் விதமாக கண்டகி ஆற்றின் மீது ஒரு பாலம் கட்டப்பட்டுள்ளது. இந்த பாலத்தின் ஒருபகுதி நேற்று முன்தினம் சரிந்து விழுந்து விபத்து நேரிட்டது. இது வரை பீகாரில் கடந்த 15 நாட்களில் நடந்த 9வது பால விபத்து இதுவாகும்.

இந்த நிலையில், பீகாரில் உள்ள அனைத்து பாலங்களையும் ஆய்வு செய்ய உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கறிஞர் பிரஜேஷ் சிங் சார்பில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், சில ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பாலங்கள் மட்டுமல்லாது, அண்மையில் கட்டப்பட்டு வரும் பாலங்கள் இடிந்து விழுந்து வருகின்றன. குறிப்பாக கடந்த 2 வாரத்தில் 9 பாலங்கள் இடிந்துள்ளன. எனவே பீகாரில் உள்ள அனைத்து பாலங்களின் உறுதி தன்மையை சோதனை செய்ய உயர்மட்டக் குழு அமைக்க பீகார் மாநில அரசுக்கு உத்தரவிட வேண்டும். சோதனையில் கண்டு பிடிக்கப்படும் பலவீனமான பாலங்களை இடிக்கவும் உத்தரவிட வேண்டும். பொதுவாகவே பீகார் மாநிலம் வெள்ள பாதிப்பு மிகுந்த மாநிலம் என்பதால், பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு, இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட வேண்டும், இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

### வாய்ப்பு வழங்கிய கழகத் தலைவர் – நிர்வாகிகளுக்கு நன்றி !

# மக்கள் பணிகளை தொய்வின்றித் தொடர்வோம்!

### தி.மு.கழக இளைஞர் அணிச் செயலாளராக 6ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நெகிழ்ச்சி !

சென்னை, ஜுலை 5-

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தி.மு.கழக இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்று வந்து 5 ஆண்டுகள் நிறைவுற்று, ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி தமது ட்விட்டர் பக்கத்தில் நெகிழ்ச்சியும், பெருமிதம் பொங்கவும் பதிவிட்டுள்ளார்.**

அந்தப் பதிவில், ‘கழக இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பு வழங்கிய கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்துள்ளதுடன், மக்கள் பணிகளையும், கழகப் பணிகளையும் தொய்வின்றி தொடர்வோம்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளராக ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-



கழக இளைஞர் அணிச் செயலாளராக இன்று (4.7.2024) ஆறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறேன். உறுப்பினர் சேர்க்கை, கிளைவார்டுகளுக்கும் நிர்வாகிகளை நியமித்தது, கைவிடப்பட்ட நீர்நிலைகளைச் சீரமைத்தது, கொரோனா கால நலத்திட்ட உதவிகள், நீட் தேர்வுக்கு எதிரான தொடர் போராட்டங்கள், திராவிட மாடல் பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், தமிழ்நாடு முழுவதும் நேர்காணல் நடத்தி, மாவட்ட அளவிலான நிர்வாகிகளைத் தேர்வு செய்தது, இரண்டாவது மாநில மாநாடு, இல்லந்தோறும் இளைஞர் அணி முன்னெடுப்பு, சமூக வலைதளத்தில் இயங்கும் தன்னார்வலர்களை ஒருங்கிணைப்பது, முரசொலி பாசறைப் பக்கம், முத்தமிழறிஞர் பதிப்பகம், தொகுதிதோறும் கலைஞர் நூலகம், தேர்தல் பிரச்சாரங்கள்... மனதுக்கு நெருக்கமான பல பணிகளை செய்துள்ளோம் என்ற வகையில் மகிழ்வாக உள்ளது.

இந்த வாய்ப்பை வழங்கிய முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உள்ளிட்ட தலைமைக் கழக நிர்வாகிகளுக்கும், இளைஞர் அணியினரைக் களத்தில் உற்சாகப்படுத்தி ஒருங்கிணைக்கும் மாவட்டச் செயலாளர்கள் உள்ளிட்ட கழகத்தினுடைய அனைத்து நிர்வாகிகளுக்கும் நன்றி.

கழகப் பணிகள் அனைத்திலும் எனக்கு உறுதுணையாக நிற்கும் இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு என் அன்பும் வாழ்த்தும்! மக்கள் பணி, கழகப் பணியை தொய்வின்றி தொடர்வோம்!

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

### பார்படாஸில் இருந்து தாயகம் திரும்பியது இந்திய கிரிக்கெட் அணி!

## டி20 உலகக்கோப்பையுடன் தாயகம் திரும்பிய இந்திய அணி வீரர்கள் !

### டெல்லி விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கானோர் உற்சாக வரவேற்பு!

புதுடெல்லி, ஜுலை 5-

டி20 உலகக் கோப்பையுடன் தாயகம் திரும்பியுள்ள இந்திய கிரிக்கெட் வீரர்கள், டெல்லியில் நட்சத்திர ஓட்டலில் கேக் வெட்டி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்ற டி20 உலகக் கோப்பை தொடரில் ரோகித் சர்மா தலைமையிலான இந்திய அணி சாம்பியன் கோப்பையை தட்டி சென்றது. 17 ஆண்டுகளுக்குப் பிறகு சாம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்த இந்திய அணிக்கு பல்வேறு தரப்பினரின் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

இறுதிப்போட்டி நடைபெற்ற பார்படாஸில் சூறாவளி தாக்கியதால் அங்குள்ள விமான நிலையம் மூடப்பட்டது. இதனால், இந்திய அணியினர் நாடு திரும்புவதில் தாமதம் ஏற்பட்டது. பி.சி.சி.ஐ. ஏற்பாடு செய்த சிறப்பு விமானம் மூலம், இந்திய அணி வீரர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் பார்படாஸில் இருந்து புறப்பட்டனர். அதி



காலை 6 மணி அளவில் டெல்லி விமான நிலையம் வந்தடைந்த இந்திய அணி வீரர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

**கேக் வெட்டி கொண்டாடிய இந்திய வீரர்கள்!**

இதைத்தொடர்ந்து, டெல்லி ஐடிசி மவுரியா நட்சத்திர விடுதியில் இந்திய அணி கொண்டாட்டத்திற்காக பிரத்யேகமாக கேக் தயாரிக்கப்பட்டு இருந்தது. இந்திய வீரர்கள் கேக் வெட்டி மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டனர்.

பார்படாஸில் இருந்து நாடு திரும்பிய இந்திய கிரிக்கெட் அணியினர் டெல்லியில் பிரதமர் மோடியை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். இதைத்தொடர்ந்து இந்திய கிரிக்கெட் அணியினர் மும்பை சென்றனர். மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று மாலை வெற்றிவிழா கொண்டாட்டம் நடைபெற்றது.